# சிந்தனை என்னும் மல்லல் பேர்யாறு




இந்நூலும் மனம் தேடிய எண்ணங்களின் வடிகால். முந்தையது, **நினைவின் நீரோட்டம்**. சிந்தையோட்டங்களை மனம் ஆற்றுப் படுத்திய பின்பு, அசை போடுதல், ஒரு நீரோட்டம் தான். ஆனால், சிந்தை, எண்ணும் போதே, வெளிப்படுத்தத் தொடங்குங்கால், அஃது ஒரு காட்டாற்று வெள்ளம் போல்தான் அமையும். அதனால் தான் நூலாசிரியர், சிந்தனை என்னும் மல்லல் பேர்யாறு என்கிறார். கணியன் பூங்குன்றனாரின் வரிகளை வார்த்தெடுத்துப், பெயர் சூட்டி யுள்ளார். தன்வயப் பட்டு, வெளிப்படும் சிந்தை ஒரு காட்டாறாகத்தான் அமையும் எனவே, **சிந்தை என்னும் மல்லல் பேர்யாறு** என்னும் இப்பெயர் சாலப் பொருந்தும்.

இந்நூலுக்கு அனிந்துரை நல்கிய திரு **C.R.** (திருக்குறள் இராஜேந்திரன்) அவர்கள், "இந்நூலில் உள்ள ஒவ்வொரு கட்டுரையும் வெவ்வேறு கோணத்தில் எடுத்துக் கொண்ட மையக் கருத்தை, பல்வேறு உத்திகளைக் கொண்டு நிலைப் படுத்துகிறது" என்கிறார்.

நூலாசிரியர், ஒரு கட்டுரையில், இயற்கையைக் கண்டு வியந்த மனிதன், அதனைக் கடவுளாக வழிபடத் தொடங்கினான் என்கிறார். ரிக் வேதப்படி, விஷ்ணு என்பது, சூரியனைக் குறிக்கும் என்கிறார். விசுவாமித்திரரின் காயத்ரி மந்திரத்தை, பாரதி, "செங்கதிர் தேவன், சிறந்த ஒளியினைத் தேர்கின்றோம்—அவன் எங்களறிவினைத் தூண்டி நடத்துக! என மொழி பெயர்த்ததையும், கவிஞர் கண்ணதாசன், தூரத்தே நெருப்பை வைத்து, சாரத்தைத் தருவாய் போற்றி! என்று கூறிய வரிகளோடு ஒப்புமைப் படுத்துகிறார். **ராம** என்பது மனத்தை மகிழ்விப்பவன் என பொருள் படும். ராமன் பன்முக நோக்கில் எனும் நூலில், அ.ச. ஞான சம்பந்தத்தின் மேற்கோளையும் இது, தஸரத ராமனைக் குறிப்பது அல்ல என்பதற்குத் துணையாகப் பதிவிடுகிறார்.

நூலாசிரியர் சொல்ல விழைவது, எந்நூலாயினும், அதன் காலச் சூழல் கொண்டு, படைத்தவரின் நோக்கம் புரிந்து, ஆய்தல் வேண்டும். ஆய்வு செய்பவர் தன்னிச்சைப்படி, கருத்தைத் திணிக்கக் கூடாது என்கிறார். Precis writing எனும் சுருக்கி எழுதுதல்தான், இராஜாஜியின், சக்கரவர்த்தி திருமகன் எனப் பெயரிடப்பட்ட இராமாயனமும், வியாசர் விருந்து எனப் பெயரிடப் பட்ட மாகாபாரதமும் என்பதை அழகுடன் விவரிக்கிறார். ஔவை பிராட்டி, சில இடங்களில் வள்ளுவனையே மிஞ்சும் வகையில், நிற்பதை மனம் நெகிழ்ந்து போற்றிப் பதிவிடுகிறார். அதுவும் சுருங்கச் சொல்லுதலாக நிகழ்கிறது. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப எனும் குறளின் சாரம், **எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்** எனும் கொன்றை வேந்தன் வரிகளிலும், நன்றி மறப்பது நன்றன்று, எனும் குறள், **நன்றி மறவேல்** என, ஆத்திசூடியில் சுருங்கி விளக்கம் தருகிறது என்கிறார். இதே போல், எண்ணித்துணிக கருமம் என்னும் குறள், **நுண்ணிய கருமம் எண்ணித் துணி** என்பதாகிறது என்கிறார். இதே போல், இன்னும் பல காட்டுகள், நாலடியார் முதலானவற்றிலிருந்தும்.

அடுத்து, **அக்கப்போர்** எனும் ஒரிதழில், தான், திருத்தல் செய்வதாயின், பதிப்பிக்க வேண்டாம் எனக் கோரியும், ஒரு கட்டுரைக்கு இவர் எழுதிய விமரிசனம், பலவகையாகவும், திருத்தம் கொண்டு, சொல்ல வந்ததும், விழைந்ததும் புதைந்து போனதை வருத்தமுடன் பதிப்பிக்கிறார். யாரும் எவரும் புகழோடு பிறப்பதில்லை, தங்கள் வாழ்வியல் நெறியால் பெருமை கொள்கிறார்கள் என்கிறார். ஆகையால், குணம் நாடி எனும் குறளுக்கு இனங்க, அணுக வேண்டும் என்கிறார்.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் எனும் குறள், பாரதி வாக்கில், **உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்** என மிளிர்கிறது என்கிறார். பொய்மைக்கும் வாய்மைக்கும் வள்ளுவன் வழியிலேயே விடை காண முயல்கிறார். அதாவது, வாய்மை என்பது தீமையிலாத சொலல். வள்ளுவனின் தாள் சேர்தல் எனும் சொல்லை ஆய்வுடன் ஆள்கிறார். வாளறிவன் நற்றாள், மாணடி, இலானடி இவை வெல்லும் சொல். சம்ஸ்கிருதத்தில் **சரணா** என்பது தாளையே குறிக்கும். நிலத்தடி, மரத்தடி என்பதைக் காணும் போது, **தாள்** என்பதே சாலப் பொருந்தும் என்கிறார்.

சங்க காலத்து கடையேழு வள்ளல்கள் தொடங்கி, அந்நாளில், புலவருடன் மன்னர்களுக்கு இருந்த நட்பையும், பல்வேறு பாடல்களுடன் விவரிக்கிறார். மனைவியைப் பிரிந்த பேகனுக்காக, கபிலர், பரணர், பெருங்குன்று கிழார் ஆகியோரது, பாடல்களையும் பதிந்து, தனது கருத்தைச் சேர்க்கிறார். பேகனின் பரிசிலைப் பெற விழையாத புலவர்கள், தன் மனைவியுடன் அவன் சேர்வதே தாங்கள் விரும்பும் பரிசில் என்கின்றனர். பேகனும் மனம் திருந்துகிறான்.

கல்வியின் தேவையை வள்ளுவரது, கல்லாமை அதிகாரத்தின் மூலம் உணர்ந்தேன் என்கிறார். அவ்விடத்து, கல்லாதார் நிலைக்கு, வள்ளுவர் காட்டிய உபமானம், இழிந்த நிலையோடு, நிற்பதால், அது முறையோ எனும் அவரது ஆய்வு, தொல்காப்பியத்தின் மூலம் தீர் வடைகிறது. சரியே என்பதாக நிலவுகிறார்.

இந்நூலின்கண், மிகப் பெரியதாகவும், நல்லதோர் உள்ளடக்கம் நிரம்பியதாகவும் இருக்கும் ஒரு கட்டுரை, மகாத்மா காந்தியைப் பற்றியதாகவும், ஆச்சார்யன் இராமானுஜரைப் பற்றியதாகவும் உள்ளது. அவர்தம் வாழ்வில் தனித்தனியே நிகழ்ந்த ஒரு நிகழ்வை, ஒரே அடிப்படையில் அமைந்ததை, படித்த நூல்களைக் கொண்டு அலசுகிறார். இரண்டு நிகழ்வுகளிலும் அடிப்படையானது, அந்நாளில், வெகுவாக கைக் கொள்ளப்பட்ட, பிறப்பின் அடிப்படையிலான தீண்டாமையே. காஞ்சியில் உறையும் பெருமான், வரதராஜருடன் பேசும் வல்லமை கொண்டவராக வாழ்ந்த, திருக்கச்சி நம்பி அவர்களை, தனது குருவாக, இராமானுஜர் அடைய நினைக்க, நம்பியோ, அது இயலாது, குலம் தாழ்ச்சி உயர்வு என்பதனைக் கூற, எப்படியும், இல்லம் அழைத்து, அமுது படைத்து, மிகுதியை உண்ண நினைக்கிறார். ஆனால் நம்பியோ, இவர் இல்லாத நேரம் வந்து, அமுதுண்டு, சென்றுவிடுகிறார். நம்பி வந்து அமுதுண்ட பின்பு, அந்நாள் வழக்கப்படி, இராமானுஜரது மனைவி, தஞ்சம்மாள் இலையைக் கோலால் தூரப்போட்டு, இடத்தையும் சாணமிட்டு மெழுகி, மீதமிருந்த உணவையும் அப்புறப் படுத்தி விடுகிறார்.

இதனால் வெகுண்ட, இராமானுஜர், பிறிதொரு நாளில், தந்திரமாக, தன் மனைவியைத் தாய் வீட்டுக்கு அனுப்பிவிட்டு தன் பணியைத் தொடர்கிறார். இந்நிகழ்வை, நூலாசிரியர், எழுத்தாளர் சாண்டில்யனின் ஸ்ரீஇராமானுஜர் எனும் நூலிலிருந்தே விளக்கியுள்ளார். அதனில், சாண்டில்யன், மனைவியை தாயகம் அனுப்பிவிட்டுத் துறவு பூண்ட, நிலையில், இராமனுஜர் மனைவி மீண்டும் தலைகாட்டாதது, அவரது துறவறத்துக்குச் சான்று எனும் வெளிப்பாடு, ஆணாதிக்கத்தின் வெளிப்பாடு என்கிறார் நூலாசிரியர். இராமானுஜரின் செய்கை தவறு அவர் மனைவிக்கு கடமை பட்டவர் என்பதையும் ஆணித்தரமாக நிறுவுகிறார்.

இதே போல் அன்னல் காந்தியடிகளின் வாழ்விலும் ஒரு நிகழ்வு. வெளிநாட்டில், வாழ்ந்த காலத்தில், ஒவ்வொருவரும் அவரது, சிறுநீர் கலத்தை கழுவ வேண்டும். புதியதாக வந்த, தீண்டத் தகாத குலமாக்கப் பட்ட வேற்று மாநில இளைஞன், அவ்வாறு செய்யாத விடத்து, தன் மனைவி கஸ்தூரி பாயை பணிக்க, அவருக்கு, கோபம் வருகிறது, காந்தியின், செயலும், பிற்பாடு, நிகழ்த்திய உரையாடலும். கஸ்தூரிபாயின், மன உணர்வை பின்னர் தான் மகாத்மா உணர்ந்து, தனது சரிதையில், சுய விமரிசனமாக எழுதுகிறார். எனவே, இதில் எனது கருத்து தேவையில்லை என்கிறார் நூலாசிரியர்.

பிறிதொரு கட்டுரை, தமிழின், இலக்கிய வரிசை, மொழியின் தொன்மை ஆகியவற்றை அலசுகிறது. கி.பி. 100 முதல் 500 வரை நீதி நூல்களும், பின்பு 900 வரை பக்தி இலக்கியங்களும் வளர்ந்ததையும், பஃறுளியாறு, குமரிக்கோடு, மீதான குறிப்புகள் சங்க இலக்கியங்களில் இருந்த போது, தொல்காப்பியத்தின் பாயிரத்தில், வடவேங்கடம் முதல் தென்குமரி ஆயிடை தமிழ்கூறு நல்லுலகு என்பதிலிருந்து, பாயிரக் காலத்தில், லெமுரியா எனப் பட்ட அப்பகுதி, கடல்கோளால் அழிந்து இல்லாதிருந்திருக்கும் என்கிறார். கணியன் பூங்குன்றன், ஔவை, பிசிராந்தையார் ஆகியவரது பாடல்களை அலசுகிறார். அரசன் தவறிழைக்கும் போது, திருத்தும் புலவன் பாடலாக, நிலமிசை வாழ்வார் என்னும் தாமற்பல் கண்ணனார் என்பவரது பாடலைக் கைக் கொள்கிறார்.

இறுதியாக, திரு **வில்லியம் சாமர்செட் மாம்** எனும் புகழ் பெற்ற ஆங்கில நாவலாசிரியர் குறித்துப் பதிவிடுகிறார். அவர் பழகிய மாந்தரின் பண்பையே கதை மாந்தரின், பண்பாக வெளிப்படுத்துபவர், தானும் அவர்களோடு ஒரு கதை மாந்தனாக உலவுவதாக படைப்பார் என்பதை அழகுடன் வெளிப்படுத்துகிறார். கடோபநிஷத்தில் இறுதியாக வரும் மந்திரத்தின் அடிப்படையானது அவரது கத்திமுனை (Razor Edge) என்னும் கதை என்கிறார். கீதை, உபநிஷத்துக்கள், பாரதி பாடல் என இன்னும் சில மேற்கோள்களுடன் தனது கட்டுரையை முடிக்கிறார்.

இந்நூலும், நூலாசிரியரின் **நினைவின் நீரோட்டம்** எனும் இன்னொரு நூலும், நினைவின் பதிவுகளாக, சிந்தையின் சொல்லோவியமாக விளங்குகிறது. அப்பப்பா, எத்துனை மேற்கோள்கள். தனது கருத்தியலையும் சுட்டத் தவறுவதில்லை. போற்றுதலுக்கும் தூற்றுதலுக்குமான காரணத்தை அவரே அழகுடன் விளம்பி விடுகிறார்.

சார்புநிலை எய்தாத இவரது கருத்தோவியங்கள், மிக மிக அற்புதமானவை. தமிழும் இவரால் ஒருநாள் பெருமை கொள்ளும் என்பதில் ஐயமில்லை. —0—